# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

## S.C. No.161/2019

## PW12

| | | |
|---|---|---|
| **Name** | : | பாலசுப்பிரமணியன் |
| **Father's Name** | : | ஐயார் |
| **Village** | : | சென்னை |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.01.2026.

A1 and 2 present. A3 absent. Petition 317 crpc allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது சென்னை அண்ணா நகர் மதுவிலக்கு அமலாக்கபிரிவில்உதவி ஆணையராக பணிபுரிகிறேன். 18.06.2017 அன்று நான் வெறையூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது சிறப்பு உதவி ஆய்வாளர் பன்னீர் செல்வம் என்பவர் நிலைய குற்ற எண். 229/2017 பிரிவு 294b, 323, 324, 506(2) இதச பிரிவுகளின் கீழ் பதிவு செய்திருந்த வழக்கில் சம்மந்தப்ட்ட ராஜம்மாள் என்பவர் 19.06.2017 அதிகாலை 5.30 மணி அளவில் இறந்து விட்டதாக அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அதே தினம் காலை 7.30 மணி அளவில் மேற்படி வழக்கை 294b, 323, 324, 506(2) இதச பிரிவுகளிலிருந்து 294b, 323, 324, 506(2) ,302 இதச படி வழக்கை மாற்றம் செய்து ஒரு பிரிவு மாறுதல் அறக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ.11**. சம்பவ இடமான பொரிக்கல் கிராமம் சுப்பிரமணி என்பவர் நிலத்திடம் சாட்சிகள் பழனி மற்றும் ராமகிருஷ்னன் என்பவர் முன்னிலையில் அந்த இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.**12. சாட்சிகள் சுப்பிரமணி, வரதராஜ், வாசுதேவன், குப்பன், சின்னதம்பி, பழனி, ராமகிருஷ்ணன், கார்த்தி, ராஜா, பொன்னுரங்கம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திருவண்ணாமலை அரசு மருத்துவமனை சென்று அங்கு சவக்கிடங்கில் இருந்த இறந்த ராஜம்மாளின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் ஒரு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த அறிக்கை **அ.த.சா.ஆ.**13. பின்னர் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய மருத்துவ அலுவலருக்கு தலைமை காவலர் 299 முருகன் என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் அனுப்பினேன். பிரேத பரிசோதனையின் போது இறந்த நபர் அணிந்திருந்த சுமார் 5 ½ மீ அளவுள்ள பச்சை நிறம் கொண்ட குங்கும கலர் பூ போட்ட புடவை ஒன்று காப்பி நிற கலர் கொண்ட வெந்தய கலர் கலந்த ரத்தக்கரை படிந்த ஜாக்கெட் ஒன்று, அவற்றை தலைமை காவலர் முருகன் நிலையம் வந்து ஆஜர் படுத்தினார். நான் அதனை படிவம் 91 ல் கைப்பற்றி நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புடவைதான் என்னிடம் தலைமை காவலர் முருகன் ஆஜர்படுத்தியது. அது **அ.சா.பொ.**2. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்டும் வெந்தய கலர் கலந்த ரத்தக்கரை படிந்த ஜாக்கெட்தான் என்னிடம் தலைமை காவலர் முருகன் ஆஜர்படுத்தியது. அது **அ.சா.பொ.**3. (உரிய சாட்சி மூலம் குறியீடு செய்யப்படவில்லை என்ற எதிரி தரப்பு ஆட்சேபனையுடம் குறியீடு செய்யப்பட்டது) வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி சத்தியமூர்த்தி என்பவரை 19.06.2017 அன்று 16.00 மணிக்கு வன்னியநகரம் பேருந்து நிறுத்தத்தில் கைது செய்து விசாரித்தேன். அப்போது எதிரி தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை சாட்சிகள் கார்த்திக் மற்றும் ராஜா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் ராஜம்மாள் மற்றும் சத்தியராஜ் அடித்த இடத்தையும் ஆகியோரை அடிக்க பயன்படுத்திய மரத்தடியையும் எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ,14**. பின்னர் 17.45 மணிக்கு பொரிக்கல் கிராமத்தில் திருமலை என்பவர் நிலத்தில் கிணற்று மேட்டிடம் இவ்வழக்கில் 1ம் எதிரி சத்தியமூர்த்தி எடுத்து ஆஜர் செய்த சுமார் 119 செமீ நீள வேப்ப மரத்தடி மற்றும் 90 செமீ நீளமுள்ள மற்றொரு

வேப்ப மரத்தடியையும் எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அதே சாட்சிகள் முன்னிலையில் ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.15**. தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்டும் 90 அடி நீளமான கொப்புதான் நான் கைப்பற்றிய 119 செமி அடி கொம்பு. அது **சா.பொ.4**. இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சட்டத்திற்கு புறம்பான இளம்சிறார் ராஜசேகர் என்பவரை 20.06.2017 அன்று பிடித்து இளம் சிறார் நீதிக்குழுமத்திற்கு அனுப்பினேன். இவ்வழக்கின் எதிரி தவமணி என்பவரை 17.07.2017 அன்று வன்னிய நகரம் காட்டுகோயில் பஸ் ஸ்டாப்பிடம் இருந்தவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பினேன். சாட்சிகள் முருகன், மரு.ஸ்ரீவத்சா ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பணி மாறுதலில் சென்றதால் வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டேன். எனது விசாரணையில் சாட்சி கார்த்திக், காசிவேலு ஆகியோர் அரசு வழக்கிற்கு ஏற்றவாறு சொன்னார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இறப்பு தகவல் யார் மூலமாக யார் சொன்னது என்றால் மருத்துவமனை பணியில் இருந்த காவலர் ஒருவர் போன் மூலம் தகவல் சொன்னார். எழுத்து மூலமான தகவல் பெறப்பட்டது, அதை இவ்வழக்கில் ஆஜர் படுத்தவில்லை. புகாரின் இறுதிபகுதியில் புகார்தாரர் சுப்பிரமணி " என் மகனும் என் அம்மாவும் மயக்க நிலையில் உள்ளதால் இன்று 18.06.2017 தேதி வெறையூர் காவல் நிலையம் சென்று நடவடிக்கைக்காக புகார் மனு கொடுக்கிறேன் " என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 19.06.2017 தேதி மாலை 3.45 மணிக்கு JM 1 நீதிமன்றத்தை அடைந்துள்ளது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.11 சட்டப்பிரிவு மாறுதல்அறக்கையும் 19.06.2017 அன்று நீதிமன்றத்தை அடைந்துள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையும் 19.06.2017 அன்று நீதிமன்றத்தை அடைந்துள்ளது என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் 7வது பகுதியில் சவத்தின் வலது பக்கம் தலையிலும், இடது கை மணிக்ட்டின் அருகே மருத்துவ தையல் போடப்பட்டுள்ளது என்று எழுதியுள்ளேன் என்றால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கை 19.06.2017 அன்று மதியம் 2.00 மணிக்கு முடிந்ததாக எழுதியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி சத்தியமூர்த்தியை நான் சொன்ன நேரத்திலும் சொன்ன

விதத்திலும் கைது செய்யவில்லை என்றும் அவர் என்னிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும் அதனடிப்படையில் எந்த பொருளையும் எங்கிருந்தும் எடுத்து என்னிடம் ஆஜர் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கிற்காக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக வழக்கு சொத்தை கைப்பற்றியதாகவும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பார்வை மகஜர், வரைபடம்,கைப்பற்றுதல் மகஜர் ஆகியவைற்றை நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் தயாரிக்கவில்லை என்றும் நான் காவல் நிலையத்ததில் அவற்றை தயார் செய்தேன் என்றால் சரியல்ல. சா.பொ.1 மற்றும் 4 இவ்வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. புடவையும் ரத்தக்கரை படிந்த ஜாட்கெட்டும் இறந்து போன நபருடையது அல்ல மற்றும் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. ராஜம்மாளின் அசல் விபத்து பதிவேடு வழக்கு விசாரணையின்போது கைப்பற்றியுள்ளேனா என்றால் கைப்பற்றியுள்ளேன். ஆனால் விபத்து பதிவேடு நகலை ஆஜர் படுத்தவில்லை என்றால் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.6 ராஜம்மாளின் சான்றிடப்பட்ட விபத்து பதிவேடு நகலில் ஊர் பெயர் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து பதிவேடு நகலில் ராஜம்மாளை 2 ஆண்கள் காலை 8 மணி அளவில் தன்னை தாக்கியதாக எழுதியுள்ளார் என்றால் சரிதான். சத்தியராஜ் என்பவர் ராஜம்மாளை சேர்ந்ததாக எழுதியுள்ளார் என்றால் சரிதான். ராஜம்மாள் சுயநினைவுடன் நல்ல மனநிலையில் சிசிச்சைக்கு ஒத்துழைத்தாக எழுதியுள்ளார் என்றால் சரிதான். சத்தியராஜை ராஜம்மாள் மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்ததாக உள்ளது என்றால் சரிதான். சத்தியராஜ் தன்னை தெரிந்த 1 நபர் காலை 9 மணிக்கு தாக்கியதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அ.சா.1 சுப்பிரமணி தனக்கு காயம் ஏறப்ட்டதாக என்னிடம் கூறவில்லை. காயம் பட்ட நபர்கள் எந்த வாகனத்தில் சிசிக்கைக்கு சென்றார்கள் என்று விசாரணையில் தெரியவந்ததா என்றால் தெரியவில்லை. சு.வாளவெட்டி கிராமத்தில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. சட்டம் சார்ந்த மருத்துவ வழக்குகளில் ஒரு நபர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றால் அது சம்மந்தமாக இன்டிமேசன் பெறப்படும் என்றால் சரிதான். இந்த வழக்கில் அது போல் இன்டிமேசன் பெறப்பட்டதா என்றால் பெறப்படவில்லை. காவல்

நிலையத்தில் இன்டிமேசன் பெறப்பட்டது என்றும் அது வழக்கிற்கு ஏற்றவாறு இல்லை என்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார் எழுதிய நபர் யார் என விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா என்றால் இல்லை. புகார் 18.06.2017 இரவு 8.00 மணிக்கு பெறப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் உள்ளது என்றால் சரிதான். புகார் கொடுத்ததாக சொல்லப்படும் சுப்பிரமணியிடம் சத்தியராஜ் வந்து மரம் வெட்டிய தகவலை சொன்னதாக புகாரிலும் விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சுப்பிரமணி, வரதராஜ் என்பவர் சம்பவ இடத்திற்கு வந்ததாக புகாரிலும் விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிகள்தான் மரத்தை நேரடியாக வெட்டிக்கொண்டிருந்தார்கள் என்று புகாரிலும் விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நான் போய் தடுத்து நிறுத்தியபோது2,3 எதிரிகள் எங்களை அடிக்கும்படியும் என்ன வந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்று புகாரிலும் விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தனசேகர் வெட்டுடா பார்த்துக்கொள்ளலாம் என்று தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ராஜசேகர் நடுமண்டையில் அடித்ததாக தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்றால் தலையில் அடித்ததாக சொல்லியுள்ளார். எதிரி சத்தியமூர்த்தி, சத்தியராஜை தலையில் அடித்ததாக தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் அடித்ததாக மட்டும் சொல்லியுள்ளார். அடிப்பட்டவுடன் அவர் அம்மா தரையில் கீழே விழுந்து மயங்கி விட்டதாக தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவத்தின்போது வரதராஜிம் வாசுதேவனும் வந்து தடுத்தார்கள் என்று தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஓடிவந்ததாக மட்டும் சொல்லியுள்ளார். அந்த நேரத்தில் குப்பன் அங்கு வந்தார் என்று தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். குப்பனின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை. என்னுடைய பட்டா இடத்தில் இருந்த மரத்தையும்

வெட்டிவிட்டார்கள் என்று தனது புகாரிலும் எனது விசாரணையிலும் அ.சா.1 சுப்பிரமணி சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நாங்கள் சொல்லியும் எதிரிகள் கேட்காமல் மரத்தை வெட்டிக்கொண்டிருந்ததால் என் பாட்டி தடுக்கபோனார் என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்று சொன்னால் ஏன் மரம் வெட்டிக்கொண்டிருக்கிறீர்கள் என்று தடுத்தார் என்று சொல்லியுள்ளார். ராஜசேகர் என் பாட்டியின் நடுமண்டையில் அடித்தாதாக என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்றால் தலையில் அடித்ததாக சொல்லியுள்ளார். 2,3 எதிரிகள் என் பாட்டியை மிரட்டினார்கள் என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்று சொன்னால் பொதுவாக மிரட்டியதாக உள்ளது. குப்பன் தடுக்க வந்தார் என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரிகள் தடியை கொண்டு மிரட்டியதால் பொன்னுரங்கம், வாசுதேவன் மற்றும் குப்பன் ஆகியோர் பயந்து ஒதுங்கி கொண்டார்கள் என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்றால் சரிதான். என் பாட்டி மயங்கி விழுந்துவிட்டார் என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் கூச்சல் போட்டோம், அக்கம் பக்கத்தினர் நிறையபேர் ஓடி வருவதை பார்த்துவிட்டு எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்று எனது விசாரணையில் அ.சா.2 சத்தியராஜ் சொல்லவில்லை என்றால் சரிதான்.

அ.சா.3 வாசுதேவனுக்கு நான் விசாரணை செய்தபோது வயது 76 வயது என்றால் சரிதான். காலையில் 9 மணியளவில் என் கொல்லையில் வேலை செய்துகொண்டிருந்தபோது சத்தம் அதிகமாக கேட்டது என்று எனது விசாரணையில் அ.சா.3 வாசுதேவன் சொல்லவில்லை என்றால் சரிதான். ராஜம்மாள் தரையில் விழுந்துவிட்டார் என்று எனது விசாரணையில் அ.சா.3 வாசுதேவன் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவருக்கு தண்ணீர் கொடுத்து மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன் என்றும், நாங்கள் வருவதற்கு முன்பு சத்தியராஜிக்கு காயம் ஏற்பட்டிருந்தது என்று எனது விசாரணையில் அ.சா.3 வாசுதேவன் சொல்லவில்லை என்றால் சரிதான்.

எனது விசாரணையில் சாட்சி குப்பன் சம்பவத்தை நேரில் பார்த்ததுபோல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. பிரேத விசாரணை

சாட்சியாகத்தான் அவர் வாக்குமூலம் கொடுத்துள்ளார். எனது விசாரணையில் சாட்சி சின்னத்தம்பி சம்பவத்தை நேரில் பார்த்ததுபோல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. சாட்சி ராமகிருஷ்ணன் என்னுடைய கையிருப்பு சாட்சி என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணையில் சாட்சி பொன்னுரங்கம் சம்பவத்தை நேரில் பார்த்ததுபோல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முறையான புலன் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.